# அறிவுறுத்தற் பத்திரம்

## பேராதனைப் பல்கலைக்கழகம் - தொடர் தொலைக் கல்வி நிலையம்

## கலைத்தேர்வுப் பரீட்சை (வெளிவாரி - புதிய பாடத்திட்டம்) 100வது தேர்ச்சி மட்டம் - 2020

**(அ) பரீட்சை விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல் தொடர்பான அறிவுறுத்தல்கள்**

I. மேற்குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சையில் தோற்றுவதற்காக, பேராதனைப் பல்கலைக்கழகத்தின் தொடர் தொலைக்கல்வி நிலைய இணையத்தளத்தில் (2020-06-25) முதல் காணப்படும் விண்ணப்பப் படிவத்தினை பதிவிறக்கி (download) பூர்த்தி செய்து சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**முன்னைய வருடங்களில் விநியோகிக்கப்பட்ட அல்லது விண்ணப்பதாரியால் சுயமாக தயார் செய்யப்பட்ட விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.**

II. விண்ணப்பிக்கும் பரீட்சையில் தோற்றுவதற்கு போதுமான தகைமைகளைக் கொண்டிராதவர்களது விண்ணப்பங்கள் அல்லது உரிய மாதிரிப்படிவம் மூலம் விண்ணப்பிக்காதவர்கள் அல்லது பூரணமற்ற அல்லது தாமதமாகி கிடைக்கப்பெறும் அனைத்து விண்ணப்பதாரிகளது விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். மேலும், அத்தகைய விண்ணப்பதாரரின் பரீட்சைக் கட்டணங்கள் மீள்செலுத்தப்பட மாட்டாது.

**(ஆ) பரீட்சை விண்ணப்பங்களைப் பூர்த்தி செய்வதற்கான அறிவுறுத்தல்கள்**

<u>இக்கணிணிமய</u> விண்ணப்பப் படிவத்தினை ஆங்கில கெபிடல் எழுத்துக்களில் மாத்திரம் நிரப்பவும். **(பரீட்சை விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள இலக்க ஒழுங்கின்படி பின்வரும் மாதிரியில் இலக்கங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன).**

1. உங்களுக்குத் தரப்பட்டுள்ள வெளிவாரி அபேட்சகர் பதிவேட்டில் / மாணவர் அறிமுக அட்டையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு உமது பதிவு இலக்கத்தை உரிய குறியீட்டு எழுத்துடன் சரியாகக் குறிப்பிடவும். (உதாரணம் : AE/BA/2018/…………) / (AE/BA/2016/…………)

2. உங்களது சரியான தேசிய அடையாள அட்டை இலக்கத்தினைக் குறிப்பிடவும்.

3. குறித்த கூண்டினுள் "✓" குறியீட்டினை இட்டு வண. / திரு. / திருமதி (Rev., Ms., Mr.) எனக் குறிப்பிடவும்.

4. முதலெழுத்துக்களுடன் கூடிய பெயரை இங்கு குறிப்பிடவும்.

| | | | | | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| K | . | N | A | V | E | E | N | T | H | I | R | A | N | | | | | | | | |

5. முதலெழுத்துக்களில் குறித்து நிற்கும் பெயர்கள் உட்பட உங்கள் முழுப்பெயரையும் முறைப்படி ஒழுங்காக சொற்களைப் பிரித்து கீழ் காட்டப்பட்டுள்ளவாறு எழுதவும்.

| | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| K | U | M | A | R | E | S | A | N | | N | A | V | E | E | N | T | H | I | R | A | N | | | | |
| | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | |

6. I. கீழ் தரப்பட்டுள்ள பாடங்களுள் நீர் தோற்றவிருக்கும் பாடங்களுக்கு எதிரே மட்டும் "✓" குறியீட்டினை இடவும்.

   II. குறித்ததோர் மொழி தொடர்பான பாட வினாத்தாள்கள் தவிர பட்டப்படிப்பிற்குரிய பிரதான பாடங்களுக்கான வினாத்தாள்கள் அனைத்தும், அபேட்சகர் தம்மை பதிவு செய்த <u>மொழி மூலம்</u> (Medium) வழங்கப்படும். நீர் பதிவாகியுள்ள மொழியினை (Medium) தெளிவாக உரிய இடத்தில் குறிப்பிடவும்.

   **(Sinhala: S, Tamil: T, English: E)**

7. a. உமது தொலைபேசி இலக்கங்களை (வதிவிட, அலுவலக, கையடக்க தொலைபேசி இலக்கங்களை) இங்கு குறிப்பிடவும்.

   b. உமது (E-mail) முகவரியினை குறிப்பிடவும். (E-mail) முகவரி தங்களிடத்தில் இல்லாது விடின் புதிய (E-mail) முகவரி கணக்கு ஒன்றினை ஆரம்பித்து அம்முகவரியினை குறித்த பெட்டியில் குறிப்பிடவும்.

8. உமது நிரந்தர வதிவிட விலாசத்தினை இங்கு குறிப்பிடவும்.

9. பரீட்சைகள் பின்வரும் நகரங்களை மையமாகக் கொண்டு நடைபெறும் பரீட்சை நிலையங்களில். உமது நிரந்தர வதிவிடத்தை அண்மித்த, நீர் விரும்பும் உமக்கு வசதியான நகரத்தை **இலக்கம் 1 இற்குள்ளும், இரண்டாம் (2ம்) விருப்பு நகரத்தை இலக்கம்-2 இற்குள்ளும், மூன்றாம் (3ம்) விருப்பு நகரத்தை இலக்கம்-3 இற்குள்ளும்** குறிப்பிடவும். பரீட்சைக்கான விண்ணப்பப்படிவங்களை அனுப்பி வைத்ததன் பின்னர் பரீட்சை நிலையத்தை மாற்றுவதற்கான கோரிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

   பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை மற்றும் ஏனைய தவிர்க்க முடியாத காரணங்கள் போன்றனவற்றின் அடிப்படையில் ஒருசில பரீட்சை நிலையங்களை இரத்துச் செய்வதற்கான வாய்ப்புகள் உள்ளன. அத்தகைய தருணங்களில், உங்களது 2ம் தெரிவின் (2ம் விருப்பு நகரத்தின்) பரீட்சை நிலையத்தில் பரீட்சை எழுதுவதற்கு நீங்கள் உட்படுத்தப்படுவீர்கள்.
   **பரீட்சை நடைபெறும் நகரங்கள்:** பேராதனை, மட்டக்களப்பு, கொழும்பு, யாழ்ப்பாணம்

10. **பரீட்சைக் கட்டணம்** (கட்டணங்களைச் செலுத்தி உரிய விபரங்களைக் குறிப்பிடவும்)

பரீட்சைகளுக்குத் தோற்றுவதற்குத் தகுதி பெறும் பொருட்டு உரிய கட்டணங்களை நாடெங்கினும் உள்ள ஏதேனும் மக்கள் வங்கிக் கிளையில் **பேராதனைப் பல்கலைக்கழக தொடர் தொலைக்கல்வி நிலையத்தின் 057-1-001-4-1338036** எனும் வங்கிக் கணக்கில் வைப்புச் செய்யவும்.

கட்டண வைப்புப் பற்றுச் சீட்டில் (Cash Deposit Slip) விண்ணப்பதாரரின் தேசிய அடையாள அட்டை இலக்கத்தினையும் பெயரையும் குறிப்பிடவும். கட்டணத்தினை கணக்கில் வைப்புச் செய்ததன் பின்னர் உமக்கு வழங்கப்படும் பற்றுச் சீட்டின் மூலப் பிரதியினை (Original slip) விண்ணப்பப் படிவத்தில் தரப்பட்டுள்ள குறித்த இடத்தில் ஒட்டவும். (பற்றுச் சீட்டின் நகல் பிரதியொன்றினைக் கைவசம் வைத்துக்கொள்ளவும்).

I. வைப்புச் செய்த திகதியினைக் குறிப்பிடவும்
II. வைப்புச் செய்த மக்கள் வங்கிக் கிளையினைக் குறிப்பிடவும்

- காசுக்கட்டளை / தபால் கட்டளை / காசோலைகள் மூலமாக செலுத்தப்படும் கட்டணங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

| **பரீட்சைக் கட்டண விபரங்கள்** | |
|---|---|
| பரீட்சை விண்ணப்பப் படிவ மீள் பரிசீலனை மற்றும் விண்ணப்பப் படிவ செயன்முறையாக்கக் கட்டணம் | ரூபா. 1,500/= |
| ஒரு பாடத்திற்கு செலுத்தப்பட வேண்டிய பரீட்சைக் கட்டணம் | ரூபா. 1,250/= |
| செலுத்தப்பட வேண்டிய முழுப் பரீட்சைக்கான கட்டணம் | ரூபா. 1,250 x விண்ணப்பித்த பாடங்களின் எண்ணிக்கை + ரூபா 1500/= |
| **உதாரணம்:-** பரீட்சைக்குத் தோற்றும் பாடம் 05 எனின் அதனுடன் பரீட்சை செயன்முறையாக்க கட்டணத்தினையும் இணைத்து செலுத்துதல் வேண்டும் | ரூபா. 1,250 x 05 + 1500= ரூபா 7750/= |

**(இ) ஏனைய அறிவுறுத்தல்கள்**

1. இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்ட விண்ணப்பப் படிவத்தினை, 9” x 4” அளவிலான தபால் உறையொன்றினுள் இட்டு அதன் இடது பக்க மேல் மூலையில் தோற்றும் பரீட்சையின் பெயரையும் வெளிவாரி அபேட்சக பதிவு இலக்கத்தையும் குறிப்பிடவும்.

2. பூரணப்படுத்தப்பட்ட பரீட்சை விண்ணப்பத்தை **பதிவு தபால் மூலம்** கீழ் தரப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

   Deputy Registrar, Centre for Distance & Continuing Education,
   P. O. Box 43, Old Galaha Road, Peradeniya.

3. மேலே தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு மாறான அல்லது குறித்த தேவைகளைப் பூர்த்திச் செய்யாத அல்லது தாமதமாகக் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

4. பூரணப்படுத்தப்பட்ட உங்கள் விண்ணப்பதோடு உங்கள் பெயரும் முகவரியும் தெளிவாக எழுதப்பட்ட 9” x 4” அளவிலான தபால் உறையில், ரூபா 50/= பெறுமதி வாய்ந்த முத்திரை ஒட்டப்பட்ட தபால் உறையொன்றினையும் இணைத்து அனுப்பவும்.

5. முன்னைய வருடங்களில் 100 வது மட்டப் பாடங்களில் சித்தியடையாத மாணவர்களும் இவ்விண்ணப்பத்தைப் பயன்படுத்தி விண்ணபிக்க முடியும்.

**உங்கள் முக்கிய கவனத்திற்கு: -**

- விண்ணப்பத்தை எமக்கு சமர்ப்பிக்க முன்னர் உரிய இடத்தில் உங்கள் கையொப்பம் இடப்பட்டுள்ளதா என மீள் பரிசீலனை செய்யவும்.
- **பரீட்சை விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர் பாடங்களை மற்றும் பரீட்சை நிலையங்களை மாற்றும் கோரிக்கைகள் கவனத்திற் கொள்ளப்பட மாட்டாது.**

விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதி நாள் : 30-07-2020

கையொப்பம் :

பிரதி பதிவாளர்
தொடர் தொலைக் கல்வி நிலையம்,
பதிவாளருக்குப் பதிலாக
2020-06-25

இவை தொடர்பான அனைத்து விபரங்களையும் அறிந்துகொள்ள www.pdn.ac.lk/cdce எனும் இணையத்தளத்தினை நாடவும்.

- மேலே குறிப்பிடப்பட்டுள்ள ஒழுங்கு விதிமுறைகள் காலத்திற்கேற்ப மாற்றங்களுக்கு உட்படுத்தப்படலாம்.

- இப்பரீட்சைக்கு எக்காரணத்திற்கேற்கேனும் விண்ணப்பிக்காத மற்றும் கல்வியாண்டினைப் பிற்போடாத மாணவர்களின் பதிவு இரத்துச்செய்யப்படும் என்பதுடன் கல்வியாண்டைப் பிற்போடுவதாயின் தொடர் தொலைக்கல்வி நிலையத்திற்கு கடிதம் மூலம் அறிவித்தல் வேண்டும்.